*2018 மார்ச் 20]*

**56—**

## குளிர்பதனக் கிடங்கு

***4655—திரு. அ. சண்முகம்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிணத்துக்கடவு தொகுதி, நாச்சிப்பாளையத்தில் காய்கறிகளுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் நிலைகொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், தமிழகத்தில் ஒரு நல்ல பட்ஜெட்டை தாக்கல் செய்ததோடு மட்டுமல்லாமல், மக்களுக்காகவே நல்ல நிதிநிலை அறிக்கையை தயார் செய்த மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதி, நாச்சிப்பாளையத்தில் காய்கறிகளுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

**திரு. அ. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை விட்டு மறைந்தாலும், நம்மையெல்லாம் காத்து நிற்கும் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். கழகத்தையும், கழக காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

அவர்கள் அமைத்துக் கொடுத்த ஆட்சியையும் இரு கண்களாகக் காத்து, சிறப்பான முறையில் வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் மற்றும் கோவை மாவட்ட மாண்புமிகு அமைச்சர் ஆகியோரை வணங்குகிறேன்.

வேளாண்மைத் துறையில் உணவு தானிய உற்பத்தியில் அகில இந்திய அளவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகம் சாதனை விருது பெற்றதை நினைத்து நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், எனது கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் ஒசூருக்கு இணையாக அதிக காய்கறிகள் உற்பத்தியாகின்றன. ஏறத்தாழ ஒரு இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிலே விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகளுக்கென குளிர்பதனக் கிடங்கை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனைப் பெற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நாச்சிப்பாளையத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிணத்துக்கடவு ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ரூ.225 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறி மற்றும் பழங்களுக்கென 500 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட குளிர்பதனக் கிடங்கு பயன்பாட்டில் உள்ளது. இதை நாச்சிப்பாளையம் பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும், தூரம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, அவருடைய அனுமதியைப் பெற்று நாச்சிப்பாளையத்தில் குளிர்பதனக் கிடங்கு விரைவில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

*2018 மார்ச் 20]*

*அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

**திரு. அ. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகம் வேளாண்மைத் துறையில் சிறந்து விளங்குவதற்கான மிகப் பெரிய விருதினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்று வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு காய்கறி மார்க்கெட்டுகளுக்கு குளிர்பதனக் கிடங்கு உள்ளிட்ட பல்வேறு வசதிகளை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. காய்கறிகளுக்கென நிரந்தர மார்க்கெட் கட்டடம் கட்டுவதற்கு மதுரை மாவட்டத்தில் ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டும், பல்லாண்டுக் காலமாக நிருவாகக் காரணங்களால் கிடப்பில் இருப்பதாக அறிகிறேன். ஆகவே, உடனடியாக, மதுரை மாவட்டத்தில் நிரந்தர காய்கறி மார்க்கெட் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, துறையின் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் மற்றும் பூண்டி ஒன்றியங்களில் அதிக அளவில் மாம்பழங்கள் உற்பத்தியாகக்கூடிய நிலையிலே, மாம்பழங்களைப் பாதுகாக்கும் வகையில், குளிர்பதனக் கிடங்கும், மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையும் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறை அலுவலர்களுடன் கலந்து, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

**திரு. வே.பொ. சிவசுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, நம்மை எல்லாம் வாழ்த்தி, வழி நடத்தி கொண்டிருக்கின்ற, நான் வணங்கும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். இன்று அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலே தமிழகம் வேளாண்மைத் துறையில் சிறந்து விளங்குவதற்கான விருதினைப் பெற்றுத் தந்த, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், துறைச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே மஞ்சள் உற்பத்தியிலே அதிக சிறப்பைப் பெற்றது மொடக்குறிச்சி தொகுதி. அந்தத் தொகுதியில்

*2018 மார்ச் 20]*

*மஞ்சளைத் தரம் பிரிக்கும் கிடங்கை உருவாக்கித் தருவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் மஞ்சளுக்கென்று தனி வணிக வளாகம் அமைக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**57—**

## திரைப்படக் கல்லூரி

***16347—திரு. எச். வசந்தகுமார்:**

*மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் திரைப்படக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*நாங்குநேரி தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள், நாங்குநேரியில் திரைப்படக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினைத் தொடுத்திருக்கின்றார். நமது நாட்டிலேயே 3 இடங்களில் மட்டும்தான் அரசின் சார்பாக திரைப்படக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின்*